1981 ஏப்ரல் 20] [திரு. கு. பா. பழனியப்பன்]

பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் — அவர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல — கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேட்டி, புடவை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி எடுத்து வருகிறார். வழங்கப்பட்டது என்று சொல்லவில்லை, இதுவரையில் கொடுக்கப்படவில்லை, அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குடிநீர் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன். அந்த முறையிலே அதைத் தனியாகப் பரிசீலிக்கவேண்டும். இரண்டாயிரம் வேண்டுமென்று யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

5. அரசினர் சட்டமுன்வடிவு

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளருர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டமுன் முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. வரவு செலவுத் திட்டம் 1981-82வாக்கெடுப்பு—தொடர்ச்சி அ. கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :